கடவுள் மேல்
கொண்டுள்ள
நம்பிக்கையால்
மட்டுமே ந்தேகங்கள்
நிச்சயமாகவும்,
தீமைகள்
நன்மையாகவும்,
இருள் ஒளிகொடுக்கும்
விடியலாகவும்
மாறும்

திருத்தந்தை பிரான்ஸிஸ்







**இன்றைய இறைவார்த்தை:**

தொடக்கநூல்: 22: 1-2, 9-13, 15-18

திருப்பாடல்: 116: 10,15-19

உரோமையர்: 8: 31-34

மாற்கு 9: 2-10

இருந்தபோதும், கடவுள் தனக்குக் கட்டளையிட்டதற்குக் கீழ்ப்படிந்து அதை நிறைவேற்றத் தயாராயிருக்கிறார். ஆபிரகாம் தனது மகனைப் பலியிட வாளை உயர்த்தியபோது, ஆண்டவரின் தூதர் அதைத் தடுத்து நிறுத்துகிறார். ஆபிரகாமின் நம்பிக்கையைக் கண்டு கடவுள் மனமகிழ்ச்சியடைகிறார். இதன்விளைவாக, ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் பூமியின் எல்லா நாடுகளிலும் பெருகி, ஆசீர்பெறுவார்கள் என்று கடவுள் கூறுகிறார்.

இயேசு யெருசலேமை நோக்கிப் பயணிக்கிறார். அந்தப் புனித நகரத்தில் தான் துன்பத்தை அனுபவிக்க இருப்பதையும் கொல்லப்படுவதையும் அவர் அறிவார். இதற்கிடையில் அவருடைய சீடர்கள் இயேசு ஏன் இறக்கவேண்டும் என்பதை இன்னும் புரிந்துகொள்லவில்லை. சீடர்களுக்கு இது பொருளற்றதாகத் தோன்றுகிறது. அந்தப் பயணத்தின் இடையில் இயேசு மூன்று சீடர்களோடு மலைக்கு ஏறிச்செல்கிறார். அங்கு அவர் உருமாற்றம் அடைகிறபோது " என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்" என்னும் தந்தையாகிய கடவுளின் குரல் கேட்கிறது. மனிதகுலத்தின் பாவங்களுக்காகத் துன்பப்பப்பட்டு இறக்கும் ஒரு கடினமான பணியை கடவுள் இயேசுவுக்கு வழங்கியுள்ளார் என்னும் செய்தி குழப்பமடைந்த சீடர்களுக்கு இதனால் நினைவூட்டப்படுகிறது. இருந்தபோதும், இயேசுவின் மரணம் வீண்போகாது. அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுவார். இதனால் மனிதகுலம் அனைத்திற்கும் மீட்பு வழங்கப்படுகிறது.

இன்றைய முதல் மற்றும் நற்செய்தி வாசகங்களும் குழப்பம் மற்றும் ஊக்கமின்மை என்ற உணர்வுடன் தொடங்குகின்றன. இருப்பினும் அவை உண்மையான நம்பிக்கையின் செய்தியுடன் நிறைவடைகின்றன. ஆபிரகாமின் வழியாக ஒரு வழித்தோன்றல் உருவானதுபோல, இயேசுவின் வழியாக முழு மனித குலத்திற்கும் மீட்பு கிடைக்கும் என்று கூறும் இந்த வாசகங்கள் நமக்கு மீட்பின் பாடமாக அமைகின்றன. நம் இல்லத்திலும், சமுதாயத்திலும் நாட்டில், உலகிலும் குழப்பம், மனச்சோர்வு போன்ற சூழ்நிலைகள் இருந்தாலும், **கடவுளுக்கும், பிறருக்கும் உண்மையாக இருந்து நாம் செ ய்யும் அனைத்து தியாகங்களும் ஒரு போதும் வீண்போகாது** என்பது நமக்கு ஒரு நினைவூட்டல். பவுல் அடிகள் கூறுவது போல 'கடவுள் நம்பக்கம் இருக்கும்போது, நமக்கு எதிராக யார் இருக்கமுடியும்?" எப்போதும் கடவுளை நம்புவோம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2024

**வெளியீடு:** மாறை மாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)
**மின்னஞ்சல்:** api@archkl.org

25 பிப்ரவரி 2024
தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)




# "முற்றிலும் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட நான் நம்பினேன்"

ஆபிரகாம் தன்னுடைய ஒரே மகனைப் பலியிடுமாறு கடவுள் கேட்கிறார். ஆபிரகாம் தம் மகனைப் பலியிட மலைக்கு அழைத்துச் செல்லும்போது என்ன நினைத்தார்; அவரது உணர்வுகள் என்ன என்பதைப் பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை. நிச்சயமாக அவர் குழப்பமும் சோர்வும் அடைந்திருக்கவேண்டும். ஒரு தந்தை தன்னுடைய மகனைப் பலியாகத் தருவதைக் கற்பனை செய்துப் பார்ப்பதும் கடினம். கடவுள் ஏன் தன் மகனின் உயிரைக் கேட்டார் என்று அவர் வியந்திருக்கலாம்.